செய்தி மற்றும் சுற்றுலாத்துறை

## மானியக் கோரிக்கை எண்.29
## சுற்றுலாத்துறை

## 2006–2007

## அறிவிப்புகள்

### 1. கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை பகுதியைச் சுற்றி கூடுதல் வசதிகள்:

கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை, அய்யன் திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுமறையான திருக்குறள் சாராம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சிலை முக்கடல்களும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. மேலும் திருக்குறளின் முக்கியக் கொள்கைகளான அறம், பொருள், இன்பம் போன்றவற்றை விவரமாக விளக்கியுள்ளது. இச்சிலை கடல் நடுவில் உள்ள சிறிய பாறையில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. சிலையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் அடிப்படை

வசதிகள் ஏற்படுத்த ரூ.39.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

**2. தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாடு:**

கழுகுமலை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள சமணர்களின் கல்வெட்டுக்கள் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது. எனவே, கழுகுமலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.48.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை முழுமையாக முடிக்க ரூ.13.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

**3. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல்**

கொடைக்கானலில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு ரூ. 15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலமானது மிகவும் தாழ்வான

பகுதியில் உள்ளதால், தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.15.00 இலட்சம் போதுமானதாக இல்லை. எனவே, சுற்றுலா வரவேற்பு மையம் கட்டும் பணிகளை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில் முடிப்பதற்கு கூடுதல் செலவினத்திற்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

### 4. வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை மேம்பாடு:

ஏலகிரி கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள உலாத்தலமாகும். ஏலகிரி மலையினை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஏலகிரி மலை மேம்பாட்டிற்கு ரூ.100.60 இலட்சம் இந்த ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

### 5. தேனி மாவட்டம் சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாடு:

இயற்கையின் எழில்கொடைக்கு எடுத்துக்காட்டாகும் "சுருளி நீர்வீழ்ச்சி". எனவே, இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின்

நன்மையைக் கருதி, சுருளி அருவியை மேம்படுத்தி குடிநீர் வசதி, சிறுவர் பூங்கா, அணுகு சாலை போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.19.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

**6. தேனி மாவட்டம் சின்ன சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாடு :**

சின்ன சுருளி நீர்வீழ்ச்சிக்கு அருகில் அணுகு சாலை, ஓய்வறை, படிக்கட்டுகள் அமைத்தல், கைப்பிடி, நடைபாதை போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.10.85 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

7. மேதகு ஆளுநர் அவர்கள் 24–5–2006 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி தமிழ்நாட்டில் சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கும் பணி முடிவடைந்து விடும்.

8. மேதகு ஆளுநர் அவர்கள் 24–5–2006 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்

திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருவதற்கு புதிய கப்பல்கள் வாங்கப்படும்.

9. படித்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு சுற்றுலாப் பகுதிகளில் வழிகாட்டிகளாக ஈடுபடுத்தப்படுவார்கள்.

10. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளம்பர முகாம்களில் காண்பிக்கும் வகையில் குறும்படம் ஒன்று தயாரிக்கப்படும்.

11. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை , ஏலகிரி, பழவேற்காடு போன்ற இடங்கள் மேம்படுத்தப்படும்.

12. சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் ஈர்ப்பதற்கு சுற்றுலாத்துறையால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக டாக்ஸி /

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சுற்றுலாப் பயணிகளிடம் எவ்வாறு தோழமையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கும் வகையில் "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்" என்ற விளம்பர முகாம்கள் நடத்தப்படும்.

**13.** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் 21 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் சொகுசு வசதிகள் நிறைந்த "ஒல்வோ" பேருந்துகளையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் "ஒல்வோ" பேருந்துகள் வாங்கப்படும்.

**14.** தமிழ்நாட்டில், சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளை விளக்கும் வகையில் சுற்றுலா

கொள்கை (Tourism Policy) ஒன்று வகுக்கப்படும்.

**15.** பாரம்பரிய பெருமைமிக்க இடங்கள் (Heritage Centres) தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**16.** தஞ்சாவூரில், மாமன்னன் இராஜராஜ சோழனின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் வகையில் தஞ்சை பெரிய கோயிலில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்படும்.

**17.** சுகாதார சுற்றுலாவினை ( Health Tourism) மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**18.** குழந்தைகள் சுற்றுலாவினை ஊக்குவிக்க (Children Tourism) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்புப் பயணத் திட்டங்களைத் தொடங்கும்.

19. சுற்றுச் சூழல் சுற்றுலா (Eco Tourism) வை மேம்படுத்தும் நோக்கில், இயற்கையோடு இயைந்த சுற்றுலா நுகர்வை வழிவகுத்து, நம்முடைய வனவளங்களும், நிலவளங்களும், கடல்வளங்களும், மலைவளங்களும் மாசுபடாமல் சுற்றுலா மேம்பாட்டுக்கு வழிவகுக்கப்படும்.

20. ஆண்டுதோறும் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் நம் சுற்றுலா வளத்தைச் சுட்டும் வகையில் வண்ணப் புகைப்படங்களுடன் நாட்காட்டி தயாரிக்கப்படும்.

21. சுற்றுலாச் செய்தி (News Letter)- ஒன்றை காலாண்டு இதழாக வெளியிட்டு, அதன் மூலம் நம் மாநில சுற்றுலா மேம்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

22. தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ்ப் பண்பாட்டையும், இலக்கியத்தையும் பெரிதும் கண்டு களிக்க விரும்புகிறார்கள். அவர்கள் பேராவலைத் தணிக்கும் பொருட்டு சென்னையில், தனியார்கள் ஒத்துழைப்புடன் 'பண்பாட்டுப் பெருவிழா' நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

23. சுற்றுலா வளர்ச்சிக் கருதி, புதிய சுற்றுலாத் தலங்களில் மக்களைக் கவரும் விதத்தில் தொடங்கப்படும் ஓட்டல், பொழுதுபோக்குப் பூங்கா, படகுத்துறை போன்ற சுற்றுலாத் திட்டங்களுக்கு (Tourism Projects) மொத்த முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். மானியத்தொகை உச்சபட்சமாக ஒரு கோடி ரூபாய் வரை அளிக்கப்படும். முதல் ஐந்தாண்டு காலத்திற்கு செலுத்தும் விற்பனை வரிக்கு

மென்கடன் அளிக்கவும், அந்தக் கடனை அடுத்த ஐந்தாண்டுகளில் **0.1** வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும்.

என். சுரேஷ் ராஜன்,
சுற்றுலாத்துறை அமைச்சர்.